*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஏப்ரல் மாதம் 16-ந் தேதி இரவு, பிரபாகரனுடைய தாயார் திருமதி பார்வதியம்மாள் அவர்கள் மலேசியாவிலிருந்து சென்னைக்கு சிகிச்சைக்காக வந்தபோது, அவர்கள் சென்னை விமான நிலையத்தில் குடியுரிமை அதிகாரிகளால் திருப்பி அனுப்பப்பட்டதாக 17-4-2010 அன்று ஊடகங்களில் செய்தி வெளியானது.

அதுபற்றி, சட்டப் பேரவையின் கூட்டத்தில் கடந்த 19-4-2010 ஆம் நாளன்று விவாதிக்கப்பட்டது.

நான் அதற்கு பதில் கூறியபோது, "திருமதி பார்வதியம்மாள் தமிழகத்திற்கு வருவது பற்றி, அவர்களிடமிருந்தோ அவர்களுக்குத் துணைபுரிய விரும்புபவர்களிடமிருந்தோ தமிழக அரசுக்கு எந்தவிதமான கடிதமோ, தகவலோ வரவே இல்லை என்றும், மத்திய அரசுக்கும், பார்வதியம்மாளுக்கும் இடையேதான் இந்தப் பயணம் பற்றிய செய்தித் தொடர்பு இருந்திருக்கிறதே தவிர, தமிழக அரசுக்கு இதில் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது என்றும், அதன் காரணமாக அவர்கள் திருப்பி அனுப்பப்பட்டுவிட்டார்கள் என்றும், அப்படித் திருப்பி அனுப்பப்பட்டவர்கள் கோலாலம்பூருக்கே திரும்பச் சென்று வைத்திய வசதி பெறுவதாகப் பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது என்றும், அவர்கள் மீண்டும் தமிழகத்தில்தான் வைத்திய வசதி செய்துகொள்ள விரும்புகிறேன் என்று அறிவிப்பார்களேயானால், அதைப் பரீசீலனை செய்து மத்திய அரசுக்கு எழுத மாநில அரசு தயாராக இருக்கிறது" என்றும் தெரிவித்தேன்.

முற்பகல் 10-30

30-4-2010 அன்று மின் அஞ்சல்மூலமாகப் பெறப்பட்டுள்ள, பார்வதியம்மாள் அவர்களின் பெருவிரல் ரேகை பதித்த கடிதத்தில், தனது சிகிச்சைக்காக கோலாலம்பூரிலிருந்து திருச்சிக்கு விமானத்தில் வர மலேசியாவில் உள்ள இந்தியத் தூதரகம்மூலமாக ஏற்பாடு செய்து தரும்படி எனக்கொரு கோரிக்கை வந்தது.

எனவே நான் ஏற்கெனவே சட்டப் பேரவையில் அறிவித்ததற்கிணங்க, திருமதி பார்வதியம்மாள்

கேட்டுக்கொண்டபடி, மருத்துவச் சிகிச்சைக்குத் தமிழ்நாட்டிற்கு வந்து மருத்துவமனையிலே சிகிச்சை பெறுவதை சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு மத்திய அரசு ஆராய்ந்து அனுமதியளிக்கலாம் என்று பரிந்துரைக் கடிதம் மத்திய உள் துறைச் செயலாளருக்கு தமிழக அரசால் 1-5-2010 அன்று அனுப்பி வைக்கப்பட்டது.

இந்த விவரங்களைத் தமிழக சட்டப் பேரவையில், துணை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் 3-5-2010 அன்று தெரிவித்தார். 3, 4 தேதிகளில் டெல்லியில் நான் பிரதமரிடமும், திருமதி சோனியா காந்தி அம்மையார் அவர்களிடமும் மத்திய உள் துறை அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்களிடமும் இந்தப் பிரச்சினை குறித்து தெரிவித்து அவர்களின் உதவியை நாடினேன்.

அதன் தொடர்ச்சியாக நமது அரசின் சார்பில் அன்றாடம் மத்திய அரசின் அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு விரைவிலே ஒரு நல்ல பதில் கிடைப்பதற்கான முயற்சியிலும் ஈடுபட்டோம்.

மத்திய அரசு 7-5-2010 தேதியிட்டு, மலேசியா, கோலாலம்பூரிலே உள்ள இந்தியத் தூதுவருக்கும்--நகல் நமக்கும்--அனுப்பியுள்ள கடிதம் ஒன்று நேற்றையதினம் வந்துள்ளது.

அந்தக் கடிதத்தில் மனிதாபிமான அடிப்படையில் திருமதி பார்வதியம்மாளை சில நிபந்தனைகளின் பேரில் தமிழகத்திற்கு வர அனுமதிக்கலாம் என்று எழுதியிருக்கிறார்கள்.

நிபந்தனைகளாக "திருமதி பார்வதியம்மாளின் தமிழக வருகை மருத்துவ சிகிச்சைக்காக மட்டுமே இருக்க வேண்டும்; அவர் மருத்துவமனையிலேதான் தங்க வேண்டுமே தவிர, வேறெங்கும் தங்கக் கூடாது; அரசு மருத்துவமனையிலே அவர் சிகிச்சை பெற விரும்பினால், தமிழக அரசு அதற்குத் தேவையான உதவிகளை எல்லாம் செய்து தர வேண்டும்; அவர் எந்த அரசியல் கட்சியினரோடோ, குறிப்பாக தடை செய்யப்பட்ட இயக்கங்களோடு பங்கு வைத்திருப்பவர்களோடோ எந்தத் தொடர்பும் வைத்துக்கொள்ளக் கூடாது; பெயர் குறிப்பிடப்பட்ட அவருடைய உறவினர்களோடு மட்டுமே தொடர்பு வைத்துக்கொள்ளலாம்" என்று அந்தக் கடிதத்தில் எழுதப்பட்டுள்ளது.

மலேசியாவிலுள்ள இந்தியத் தூதுவரகம் திருமதி பார்வதியம்மாளோடு தொடர்பு கொண்டு ஆறு மாத காலத்திற்கு "விசா" வழங்கலாம் என்றும், சென்னை உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குக்கு எந்தவிதமான குந்தகமும் இல்லாமல் இந்த ஆணை மத்திய அரசினால் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சாதாரணமாக இதுபோன்ற நிகழ்வுகளில் முடிவு எடுப்பதற்கு சில காலம் பிடிக்கும் என்றாலும், அந்த அம்மையாரின் உடல் நிலை கருதி, மத்திய, மாநில அரசுகள் மேற்கொண்ட நடவடிக்கைகளின் காரணமாக இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கு மேல் மலேசியாவில் உள்ள அந்த அம்மையாரின் முடிவுக்கிணங்க தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை இந்த அவைக்கும், நாட்டிற்கும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

3. தகவல் கோரல்

(அ) சென்னை, தரமணியில் தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்க நிலம் வழங்கியதில் முறைகேடு நடந்ததாகத் தெரிவித்தது

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன சொல்லுங்கள்?

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 28-4-2008 அன்று தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், (TIDCO) டாட்டா ரியால்ட்டி மற்றும் இன்ஃபிராஸ்டிரக்சர்ஸ் லிமிடெட், இந்தியன் ஹோட்டல்ஸ் கம்பெனி லிமிடெட் ஆகிய நிறுவனங்களுடன் சேர்ந்து ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டிருக்கிறது. அந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சில அரசியல் தலையீடுகளும், கைமாறுகளும் நடந்ததாகத் தகவல் வந்ததையடுத்து தங்களிடம் இன்றைக்கு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம், அதனை எப்போது கொடுத்திருக்கிறீர்கள்? (குறுக்கீடு) இன்று காலையில்தான் அதனைக் கொடுத்திருக்கிறீர்கள்.